# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| **MCOP No. 299/2024 (ம) 301/2024** | **நாள் – 10.02.2026** | **சாட்சி – ம.சா.3** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கௌதம் | தந்தை பெயர் | கணேசமூர்த்தி |
| ஊர் | புளியம்பேட்டை | தாலுக்கா | திருவிடைமருதூர் |
| தொழில் | சுதைவேலை | வயது | 20 |

**முதல் விசாரணை:**

நான் அசல் மனு எண்.301/2024–ல் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு சாட்சி 3 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

1. 31.03.2024 தேதியிட்ட கும்பகோணம்அரசு மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு சான்றுஅசல் ம.சா.ஆ.14
2. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.15 (அசலுடன் ஒப்பிடப்பட்டது)

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் சென்ற வாகனம் TN–68–Q–1837 என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மேற்படி இருசக்கர வாகனத்தை யார் ஓட்டி சென்றது என்றால்

என்னுடன் பணிபுரியும் கிரிதரன் என்பவர் ஓட்டுநர். கிரிதரன் மனு எண். 329/2024 ல் மனுதாரர் என்றால் சரிதான். நான் சென்ற வாகனத்திற்கு காப்பீடு பாலிசி இல்லை என்றால் எனக்கு தெரியாது. கிரிதரனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியவில்லை. காவல் துறையில் விபத்து குறித்து யார் புகார் கொடுத்தது என்றால் கிரிதரன் புகார் கொடுத்தார். இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் சென்றோம் என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டியது கிரிதரன் என்றாலும் நானும், ஆகாஷ் என்பவரும் பின் இருக்கையில் அமர்ந்து இருந்தோம் என்றால் சரிதான். 2 நபர்கள் செல்லும் இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் சென்றது சட்டப்படி தவறு என்றால் சரிதான். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியுமா என்றால் தெரியும். கௌதமுக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியுமா என்றால் தெரியும். எத்தனை வருடங்கள் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியும் என்றால் 6 வருடங்கள் தெரியும். என்னுடைய வாகனத்தை ஓட்டும் அனுபவத்தில் இரண்டு நபர்கள் செல்லக்கூடிய இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் செல்லும் போது வாகனத்தை ஓட்டும் போது பெட்ரோல் டேங்கை ஒட்டி உட்காரும் போது இருசக்கர வாகனத்தை ஓட்டுநர் சற்று சிரமமாக இருக்கும் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் நடுவில் உட்காரும் போது கால் வைப்பதற்கான இடம் (foot rest) இருக்காது என்றால் சரிதான். அதனால் ஆகாஷ் காலை தொங்கவிட்டு தான் உட்கார்ந்திருந்தார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நாங்கள் மூவரும் தலைகவசம் அணியவில்லை என்றால் வாகனத்தை ஓட்டிய கிரிதரன் மட்டும் தலைகவசம் அணிந்திருந்தார். மற்ற இருவரும் தலைகவசம் அணியவில்லை. ம.சா.ஆ.7, 14ல் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரிதான். விபத்திற்கு முழு காரணம்

வாகனத்தை ஓட்டிய கிரிதரன் என்றாலும், அவர் சாலையின் குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றாலும் சரியல்ல. என் மீது மோதியதாக சொல்லும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கப்படவில்லை என்று ம.சா.ஆ.4ல் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. எனது வேலை மற்றும் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவ செலவு ரூ.1 லட்சம் செய்ததாக மனுவில் குறிப்பிட்டு இருக்கும் பட்சத்தில் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு எனக்கு ஊனமோ, உபாதைகளோ இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல. எனக்கு வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.02.10 05:12:39 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*